# விடுதலைப் பயணம் காட்டும் புலம்பெயர் பயண இலக்கியக்கூறுகள்

***முனைவர் ஜா. சாந்தி பாய்***
உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை
சாராள் தக்கர் கல்லூரி, திருநெல்வேலி

மலர்: 11

சிறப்பிதழ்: 2

மாதம்: ஜூலை

வருடம்: 2023

**P-ISSN: 2321-788X**

**E-ISSN: 2582-0397**

**DOI:**
https://doi.org/10.34293/sijash.v11iS2i1-July.6408

***முன்னுரை***

*கிறிஸ்தவர்களின் புனித நூலாக விளங்குகின்ற விவிலியம் பல இலக்கிய வடிவங்களையும், வரலாற்று நிகழ்வுகளையும் இயற்கைக்கு அப்பாற்பட்ட நிகழ்வுகளையும் தன்னகத்தே கொண்டு விளங்குகின்றது. இரு பிரிவுகளான பழைய ஏற்பாடு, புதிய ஏற்பாட்டில் மொத்தம் 66 புத்தகங்கள் இடம் பெற்றுள்ளன. பழைய புதிய எற்பாட்டின் மையக் கருத்து இறைவன் மனிதன் மீது கொண்டிருக்கும் அன்பே. பழைய ஏற்பாட்டில் 39 புத்தகங்களும் புதிய ஏற்பாட்டில் 27 புத்தகங்களும் தொகுக்கப்பட்டுள்ளன. பழைய ஏற்பாட்டின் இரண்டாவது நூல் விடுதலைப் பயணம் என்பதாகும். விவிலியம் முழுவதும் பயணம் குறித்த பல்வேறு குறிப்புகள் இருந்தாலும் பயணம் என்ற பெயரில் வரும் இந்நூலை பயண இலக்கியம் என்ற அடிப்படையிலும் புலம் பெயர் இலக்கியம் என்னும் அடிப்படையிலும் ஆராய்வதே இக்கட்டுரையின் நோக்கம்.*

## பயண இலக்கியம்

உலகத்திலுள்ள பல்வேறு நாடுகளுக்கும் சென்று வந்தவர்கள் தங்களது அனுபவங்களைத் தொகுத்து தந்து அதனை நூலாக வெளியிட்டுள்ளனர். இத்தகைய இலக்கியங்களே பயண இலக்கியங்களாகும். இப்பயணத்தைச் செலவு என்றும் யாத்திரை என்றும் குறிப்பிடுவர். நிலப்படங்களும் நிலப்பட வரைவியலும் இல்லாத அக்காலத்தில் பயணிகள் பாதை கண்டறிவதும் அதன் வழிச் செல்வதும் அவர்களுக்குப் பெரும் இடையூறாகவே அமைந்தன. ஆயினும் அவர்கள் சென்று வந்த வழியின் தன்மையை எழுத்துக்களில் பதிவிட்டு பின் வருவோர் செல்வதற்கு ஆற்றுப்படுத்தினர். பயணநூல்களில் ஒவ்வொருவரும் தாம் கண்டவற்றையும் தம் அனுபவத்தையும் குறிப்பிட்டுள்ளனர். பயண இலக்கியத்தின் நோக்கம் பிற இலக்கியங்களின் நோக்கங்களின்றும் வேறுபட்டதும் தனித்துவம் மிக்கதுமாகும்.

"வாழும் இடத்திலிருந்து மற்றொரு இடத்திற்கு ஏதாவது காரணம் பற்றிச் செல்லுதல் பயணம் ஆகும். பயணம் சென்ற ஒருவர், தான் சென்ற இடத்தில் பார்த்தவை, கேட்ட செய்திகள், அனுபவங்கள், அதன் சிறப்பியல்பு, அங்கு வாழ்வோர் போன்றவற்றைச் சுவையாக எழுதும் போது அது பயண இலக்கியமாக மலர்கிறது"[1] என்கிறார் முனைவர் மு. வையாபுரி. பல நாடுகளின் வரலாறுகள் பயண இலக்கியங்களினூடாகவே பெரிதும் அறியப்படுகின்றன.

தமிழில் வழங்கும் பயண இலக்கியங்கள் இரு நிலைகளில் அமைகின்றன. மதத்திற்கு முக்கியத்துவம் அளித்து சமயச் செய்திகள் மட்டும் பேசப்படுவது ஒரு நிலை. தொழில், சமூகநோக்கு, கல்வி பற்றிய செய்திகளுக்கு முக்கியத்துவம் அளிப்பது மற்றொரு நிலை.

## புலம் பெயர்தல்

புலம்பெயர்தல் என்றால் ஒரு இடத்திநின்று மற்றொரு இடத்திற்குச் செல்லுதல் என்பது பொருளாகும். புலம் பெயர்தலுக்குப் பல்வேறு காரணிகள் இருந்த போதிலும் "இருத்தலுக்கான தப்பிப் பிழைத்தலே" காரணம் என்று உறுதிபடக் கூறலாம். ஆதியில் மனிதர்கள் நாடோடிகளாகவே புலம் பெயர்ந்தார்கள். உணவுக்காக அவர்கள் அடிக்கடி புலம் பெயர வேண்டிய தேவை ஏற்பட்டது. பின்னர் சமூக பொருளாதார மற்றும் அரசியல் காரணங்களுக்காக புலம் பெயர்ந்தார்கள்.

**"புலம் பெயர்தல் என்பது மானுட சமுதாயத்தின் வளர்ச்சிக்கு எப்பொழுதுமே உறுதுணையாகத்தானிருந்து வந்திருக்கிறது"[2]**

என்கிறார் சேதுராமன்.

"தன் இருத்தலின் அச்சம் காரணமாக, எந்தவோர் இனச் சமூகமும் தன் வாழிடத்தை விட்டு நீங்கிச் செல்லுதல் புலப்பெயர்வாகும். அவ்வாறு சென்றோர் புலம்பெயர்ந்தோர் ஆவர் - அவர்களுள் முகிழ்த்தெழுந்த இலக்கியம் புலம் பெயர்ந்தோர் இலக்கியம் ஆகும்"[3] என்று தேவகாந்தன் குறிப்பிட்டுள்ளார்.

"தங்களை அவமானத்துக்கு உள்ளாக்கிய மண்ணிலிருந்தும், நில உரிமையாளர்களிடம் இருந்தும் மீண்டு வேற்றுநாடுகளுக்குக் குடி பெயர்தலை அம்மக்கள் உயர்வாகக் கருதினர். சமூக ரீதியாகப் பாதிக்கப்பட்ட அம்மக்களின் சுயமரியாதையையும் தன்னம்பிக்கையையும் மீட்டுத் தருவதாக இக்குடிபெயர்வுகள் அமைந்திருந்தன."[4]

## விடுதலைப் பயணம்

விவிலியம் முதலில் எபிரேய மொழியில் எழுதப்பட்டது. இம்மொழியில் விவலியத்தின் இரண்டாவது நூலுக்குத் தலைப்பு "அவர்கள் பெயர்களாவன" என்று பொருள்படும் தலைப்பாக இருந்தது. கிரேக்க மொழிபெயர்ப்பில் வெளியே புறப்பட்டுச் செல்லுதல் என்ற பொருள்படும் "எக்ஸோடோஸ்" என்ற பெயர் அமைந்தது. இதன் ஆங்கில மொழிபெயர்ப்பு "வெளியே புறப்பட்டுச் செல்லுதல்" என்று பொருள்படும் "எக்ஸோடஸ்" (Exodus) என்பது ஆகும். தமிழ் மொழியில் இது "யாத்திராகமம்" என்று மொழிபெயர்க்கப்பட்டது. யாத்திரை என்பது பயணத்தைக் குறிக்கும் சொல் ஆதலால் யாத்திராகமம் என்பது காரணப்பெயராக அமைந்தது. புதிய மொழி பெயர்ப்பில் "விடுதலைப்பயணம்" என்று பெயர் பெற்றது. இஸ்ரவேல் மக்கள் எகிப்து தேசத்தின் அடிமைத்தனத்தில் இருந்து விடுதலை பெற்று வாக்குத்தத்தத்தின் பூமியாகிய கானான் தேசத்திற்குப் புறப்பட்டுச் செல்வதே இப்புத்தகத்தின் கருப்பொருள். அதனால் இந்தப் பெயர்கள் யாவும் பொருத்தமுடைய பெயர்களாகவே அமைந்துள்ளன. இந்நூல் முழுவதும் இஸ்ரவேலர் சென்ற பயணக் குறிப்புகள் இடம் பெற்றுள்ளன.

அடிமைகளாக எகிப்து தேசத்தில் வாழ்ந்த இஸ்ரவேல் என்னும் இனக்குழுவின் புறப்படுதலும் அவர்கள் வனாந்திரத்தில் பயணித்ததுமான செய்திகளைத் தொகுத்துத் தருவதே இந்நூலாகும். எகிப்தின் ராஜாவான பார்வோனின் கீழ் இஸ்ரவேலர் ஒடுக்கப்படுவதும், அவர்களை அடிமைத்தனத்திநின்று விடுவிக்க மோசே என்ற தலைவன் எழும்புவதும், இறைவன் இவர்களுக்குத் துணை நின்று வழிநடத்து வதும், இயற்கைக்கு அப்பாற்பட்ட பல நிகழ்வுகள் நடந்து அவர்கள் எகிப்தை விட்டு வெளியேறி கானான் தேசம் நோக்கி பிரயாணப்படுவதுமான செய்திகளை இந்நூல் உள்ளடக்கியுள்ளது.

**ஆசிரியர்**

விவிலியத்தின் முதல் ஐந்து நூல்களும் சட்ட நூல்கள் என்று அழைக்கப்படுகின்றன. இவற்றை எழுதியவர் மோசே என்பவராவார். இவர் எழுதியதால் இந்நூல்களை மோசேயின் நூல்கள் அல்லது மோசேயின் நியாயப்பிரமாணம் என்று கூறுகிறார்கள். இரண்டாவது புத்தகம்விடுதலைப்பயணம் என்ற இந்த நூலாகும். இந்நூலின் ஆசிரியரே இதன் கதாநாயகரும் ஆவார். இவர் தனது நாற்பது வயதுவரை எகிப்தின் அரண்மனையிலும், நாற்பது வருடங்கள் மீதியானியரின் தேசத்திலே ஆடுகளை மேய்ப்பவராகவும், கடைசி நாற்பது வருடங்கள் இஸ்ரவேல் மக்களை வழிநடத்துகின்ற தலைவனாகவும் வாழந்து தம் நூற்றிருபதாம் வயதில் மரித்தார். இவர் தாம் அனுபவித்த, கண்ட, கேட்ட எல்லாவற்றையும் இந்நூல்களில் தருகிறார். இரண்டாம் நூலான விடுதலைப் பயணம் முதல் ஐந்தாம் நூல்வரையிலும் பயணங்கள் தொடர்ந்தாலும் பயணத்தின் தொடக்கம் இந்நூலில் அமைகிறது. தன் அனுபவங்கள் முழுவதையும் சுவைபடவும், திருப்புமுனைகளோடும் அமைத்திருக்கும் பாங்கு சிறப்புடையது.

**நூலின் உள்ளடக்கம்**

விடுதலைப் பயணம் என்ற இந்நூல் 40 அதிகாரங்களைக் கொண்டது. இஸ்ரவேலர் எகிப்தின் அடிமைகளாக மாறுவதும், அவர்கள் ஒடுக்குதலையும், கூக்குரலையும் கேட்ட இறைவன் மோசே என்ற தலைவனைத் தமது கருவியாகப் பயன்படுத்தி இஸ்ரவேலரை மீட்டு அழைத்துசெல்வதும், அவர்கள் வாழுவதற்கேற்ற நெறிமுறைகளைத் தந்து, அவர்களோடு உடன்படிக்கை செய்து கொள்வதும், தாம் தங்குவதற்குக் கூடாரம் ஒன்றை அமைப்பதற்கான கட்டிட வரைபடம் தந்து விவரிப்பதும் இந்நூலின் உள்ளடக்கமாகும்.

இந்த உள்ளடக்கத்தின் அடிப்படையில் இந்நூலினை இரண்டு பகுதிகளாகப் பிரிக்கலாம்.

1. நியாயத்தீர்ப்பும் விடுதலையும் (யாத் 1:8-19:2)
2. புதிய சமுதாயமும், ஒழுங்குமுறைகளும் (யாத் 19:7-40 :38)

நிகழ்வுகளின் அடிப்படையில் இதனை நான்காகப் பகுக்கலாம்.

1. இஸ்ரவேலர் எகிப்தினின்று விடுதலை பெறுதல் 1:1-15:21
   (அ) எகிப்தில் அடிமைத்தனம் 1:1-22
   (ஆ) மோசே பிறப்பும் இளமையும் 2: 1-25
   (இ) மோசேயின் அழைப்பு 3:1-4:31
   (ஈ) மோசே, ஆரோன் பார்வோனிடம் விடுதலை கேட்டல் 5:1-11:10
   (உ) பஸ்காவும் எகிப்திலிருந்து வெளி யேறுவதும் 12:1 -15:21
2. செங்கடல் முதல் சீனாய்மலைவரை 15:22-18:27
3. பத்து கட்டளைகள் - உடன்படிக்கை நூல் 19:1-24:18
4. உடன்படிக்கைக் கூடாரம் வழிபாட்டு ஒழுங்குமுறைகள் 25:1 -40 :38

அசாதாரணமான பல நிகழ்வுகளையும், ஆச்சரியமான அற்புத செயல்களையும் விவரிக்கும் இந்நூல் நிகழ்விடங்களாக எகிப்தையும் சீனா மலையையும் களமாகக் கொண்டது. வனாந்தரத்தில் அவர்கள் கடந்து வந்த நிகழ்வுகள், அடிமைத்தனத்திலிருந்து விடுதலை பெற்றதால் வந்த நேரடி விளைவுகள். புதிய வாழ்விற்கான பயிற்சிகள் யாவும் இந்நூலில் பரந்து கிடக்கின்றன.

**பயண இலக்கியக் கூறுகள்**

உலகத்திலுள்ள பல்வேறு நாடுகளுக்கும் சென்று வந்தவர்கள் தங்களது அனுபவங்களைத் தொகுத்து அதனை நூலாக வெளியிட்டுள்ளனர். இந்நூல்கள் பயணம் செய்பவரின் ஆயத்தம், எங்கிருந்து எங்கே சென்றார், எப்படிச் சென்றார் என்பது முதல் அங்கிருந்து திரும்பி

தன் வீடு வருவது வரையிலான செய்திகளைச் சுவைபட தொகுத்துத் தருவதாக அமையும். ஆனால் விடுதலைப் பயணம் என்ற நூல் என்றைக்குப் பயணம் செய்ய வேண்டும் என்பது தெரிந்திருந்தாலும் அவர்கள் தங்கள் வழிக்கென்று எதையும் ஆயத்தம் செய்வதற்கும் நேரமில்லாமல் துரத்திவிடப்பட்டதாக (வி.ப.12:39) தொடங்குகின்றது. இப்பயணம் திட்டமிடப்பட்ட பயணம் போலல்லாது பயணத்திற்கு ஏற்ப திட்டமிடல் அமைகிறது. இக்கால பயண இலக்கியங்களின் அடிப்படையில் இந்நூலை ஆராயாமல் இந்நூலில் காணப்படும் பயண நிகழ்வுகளை எடுத்துக்காட்டி விளக்க முற்படுகிறது இவ்வாய்வு.

அடிமைத்தனம், அசாதாரண நிகழ்வுகள், வெற்றிக்கீதம், இடங்களுக்குப் பெயரிடுதல், தலைமைக்கு எதிரான போராட்டம், வாழ்வின் நெறிமுறைகள், கூடாரம் கட்டும் முறை, அதை செய்து நிறுவுதல், நாட்குறிப்பு போன்ற செய்திகள் பதிவு செய்யப்பட்டுள்ளன. இப்பயணத்தின் மையம் இறைவனே இஸ்ரவேல் மக்களை வழிநடத்தினார் என்பது தான். அவர்தான் அவர்களின் வாழ்விற்கான நெறிமுறைகளைக் கூறியதோடு இரவும் பகலும் கூடவே இருந்து நடத்தினார். அதனால் இங்கு தலைமைத்துவத்திற்கான எல்லாப் பெருமையும் இறைவனுக்கே. மோசே, ஆரோன் போன்றவர்கள் இறைவனின் கருவிகளே. இறைவன்சொல்வதை மக்களுக்குக் கூறி இறைவனுக்கும் மனிதருக்கும் இடையே நடுவர்களாக இருந்து மக்களை வழி நடத்தினர்.

### அடிமைத்தனம்

இஸ்ரவேலர் என்பவர்கள் யாக்கோபு என்ற தகப்பனின் பன்னிரண்டு குமாரர்கள். யாக்கோபு என்றால் “எத்தன்” என்பது பொருள். எத்தனாகிய யாக்கோபு இறைவன் ஆசீர்வாதத்தைக் கேட்டுப் பெற்றுக் கொள்கிறான். அப்போது இறைவன் அவனுக்கு இஸ்ரவேல் என பெயரிடுகிறார். (ஆதியாகமம் 32:28). அவனுடைய வம்சமே இஸ்ரவேலர். இறைவன் இவர்களின் மூதாதையரான ஆபிரகாமை அழைத்துக் கானான் தேசத்தைத் தருவேன் என வாக்கு பண்ணுகிறார். அந்த வாக்கின்படி கானான் தேசத்தில் வாழ்ந்த இஸ்ரவேலர் பஞ்சத்தின் காரணமாக எகிப்து சென்றனர். அங்கு 430 வருடம் வாழ்ந்தனர். (வி.ப 12:40,41). அக்காலங்களில் இஸ்ரவேலர் மிகுதியும் பெருகினார்கள். இதைக் கண்ணுற்ற எகிப்தின் மன்னன் போர் ஏற்பட்டால் அவர்கள் எதிரிகளோடு சேர்ந்து எகிப்தியரை எதிர்த்து நிற்பர் என்று எண்ணினான். இந்த எண்ணத்தினால் கடும் வேலையால் அவர்களை ஒடுக்குவதற்காக அடிமை வேலை வாங்கும் அதிகாரிகள் அவர்கள் மேல் நியமிக்கப்பட்டனர்.” (வி.ப.1:11) எவ்வளவாய் ஒடுக்கினார்களோ அவ்வளவாய் இஸ்ரவேலர் பெருகினார்கள். இஸ்ரவேலர் மீது எகிப்தியருக்குப் பயமுண்டாயிற்று. அதனால் மிகுதியான வேலைப்பளுவால் அவர்களைக் கொடுமைப்படுத்தினார்கள். இஸ்ரவேலர் தாம் செய்த வேலையால் வாழ்க்கையே கசந்து போகும்படி வருந்தினர் (வி.ப1:14) இவ்வாறு அடிமைத்தனத்தின் வாழ்க்கையில் வாழந்து மனம் நொந்து இறைவனை நோக்கி முறையிட்டனர். இஸ்ரவேலர் பெருகாதபடி தங்கள் ஆண்குழந்தைகளைத் தண்ணீரில் போட்டுக் கொன்று போடும்படி வற்புறுத்தப்பட்டார்கள் (வி.ப. 1:22)

எகிப்தில் சுதந்தரமாக வாழ்ந்த இஸ்ரவேல் மக்கள் அடிமைத்தனத்தின் வாழ்க்கைக்குட்பட்டதே இவர்களது பயணத்திற்கான காரணம் ஆகும். இந்த இடத்தில் “புலம் பெயர்தல்” என்ற கருத்தாக்கத்தையும் பொருத்திப் பார்க்கலாம். தேவகாந்தன் கூறும் அச்சத்தின் காரணமாக புலம்பெயர்தல் என்பது இங்கு நிகழ்கிறது. கிட்டத்திட்ட 4 நூற்றாண்டுகள் ஒரே இடத்தில் வாழ்ந்த இவர்கள் அரசியல் காரணத்துக்காக, செய்யப்பட்ட கொடுமையின் நிமித்தம் வெளியேறத் துணிகின்றனர்.

### அசாதாரண நிகழ்வுகள்

விடுதலைப் பயணம் என்ற நூல் திட்டமிட்டு துவங்கப்பட்ட பயணத்தைக் குறிப்பிடவில்லை. அடிமைகளாக நடத்தப்பட்டதால் விடுதலை பெறவேண்டும் என்ற எண்ணத்தின் உந்துதலால் வெளி யேற வேண்டும் என்று இஸ்ரவேலர் எண்ணினார்களே ஒழிய அவர்களால் எதையும் செய்ய முடியவில்லை. ஏனென்றால், அவர்கள் எங்கள் தேவனுக்கு ஆராதனை செலுத்த எங்களை அனுப்ப வேண்டும் என்று பார்வோனிடம் அனுமதி கோரிய போது மறுப்பே பதிலாக வந்தது. மட்டுமின்றி, அவர்கள் யாவரும் ஒன்றுகூட முடியாதபடி வேலைப்பளுவை அதிகமாக்கினார்கள். செங்கல் அறுக்கிற அந்த வேலையில் வைக்கோலையும் அவர்களே சேகரிக்க வேண்டும் என்றார்கள். வேலைச்சுமை அதிகரிப்போடு அடிக்கவும் செய்தார்கள் (வி.ப.5:13,14) பார்வோனும், அவன் ஆளோட்டிகளும் செய்த இடுக்கண் மிகுதியானதால் செய்வதறியாது திகைத்து நின்ற இஸ்ரவேல் மக்களுக்காக இறைவன் பலகாரியங்களைச்செய்தார். இந்நிகழ்வுகள் யாவும் அசாதாரண நிகழ்வுகளே. பத்து விதமான தண்டனைகளைப் பார்வோனுக்கும் எகிப்திய மக்களுக்கும் கொடுக்கிறார். பத்தாவது தண்டனையே தலைப்பிள்ளை சங்காரம். எகிப்திய வீடுகளில் எல்லாம் தலைப்பிள்ளை மரித்தது. எகிப்தியரின் கூக்குரல் பெரிதாக இருந்தது. அதன் பின்பே இஸ்ரவேலர் புறப்பட்டார்கள். பத்துவிதமான தண்டனைகள் வருமாறு,

1. நீர்நிலைகள் எல்லாம் இரத்தமாதல் (வி.ப. 7:20)
2. தேசம் எங்கும் வீடுகள் எங்கும் தவளைகள் வருதல் (8:6)
3. பேன்கள் (8:17)
4. வண்டுகள் (8:24)
5. விலங்குகளின்மரணம் (9:6)
6. மனிதர், மிருகங்கள் மேல் எரிபந்தமான கொப்பளங்கள் (9:10)
7. அக்கினி கலந்த கல்மழை (9:24)
8. வெட்டுக்கிளிகள் (10:13)
9. மூன்று நாள் காரிருள் (10:22)
10. மனிதர்கள் மற்றும் விலங்குகளின் முதற்பேறனைத்தும் மரணம் (12:29)

பத்தாவது தண்டனையின் பின்பே புறப்பட்டபடியால் எந்தவித ஆயத்தங்களின்றியே பயணப்பட்டார்கள். பயணத்தின் போது வழியற்ற நிலையில் செங்கடல் இரண்டாக பிரிந்தது, கசந்த நீர் இனிமையுடையதாய் மாறியது, உணவுக்கு மன்னா வானத்திலிருந்து வந்தது, ஆறு இலட்சத்திற்கும் அதிகமான மக்களுக்குக் காடை கொடுக்கப்பட்டது, தண்ணீரின்றி தவித்த போது கன்மலையிலிருந்து தண்ணீர் வந்தது. இவ்வாறாக, பயணத்தின் தொடக்கம் முதல் பயண வழிகளில் முழுவதும் அசாதாரண நிகழ்வுகள் நிகழ்கின்றன. ஒவ்வொன்றும் ஏன் நடந்தன, எப்படி நடந்தன என்பதைப் பற்றிய செய்திகளை மோசே சுவைபட பதிவிட்டுள்ளார்.

### வெற்றி கீதம்

பயணங்களின் போது ஏற்படும் நிகழ்வுகளில் இதுவும் ஒன்று. மனம் மகிழ்ச்சியாக இருக்கும் போது பாடல்களைப் பாடுவது. இந்நூலின் 15ஆம் அதிகாரத்தில் இப்பாடல் பதிவு செய்யப்பட்டுள்ளது. எகிப்திலிருந்து விடுதலை மட்டுமல்லாமல் தங்களைத் துரத்திவந்த எகிப்திய படைகள் செங்கடலில் அமிழ்ந்து அழிந்தார்கள்என்றசெய்தியேஇப்பாடலின் மையப் பொருளாக அமைந்தது. பின்னே எகிப்திய படைகளும் முன்னே செங்கடலும் இருந்த போது மக்கள் மரணத்திகில் அடைந்தார்கள். ஆனால் இறைவன் அவர்களுக்குச் செங்கடல் இருபுறமும் குவியலாக நிற்க நடுவே நடப்பதற்கான பாதை ஒன்றும் அமைத்துக் கொடுத்தார். மக்கள் அனைவரும் செங்கடலைக் கடந்தபோது பார்வோனின் படைகள் அவர்களைப் பின்பற்றி கடலில் இறங்ககடல்மீண்டுமாய்மூடிக்கொண்டது. எகிப்தின் படைகள் மூழ்கி இறந்தார்கள்.

இதனை "பார்வோனின் இரதங்களையும் அவன் சேனைகளையும் சமுத்திரத்தில் தள்ளி விட்டார். *(15:11)* என்றும் "உம்முடைய காற்றை வீசப்பண்ணினீர், கடல் அவர்களை மூடிக்கொண்டது: திரளான தண்ணீர்களில் ஈயம் போல் அமிழ்ந்து போனார்கள்"*(15:10)* என்றும் பாடுகிறார்கள். இப்பாடல் இறைவனைப் புகழ்ந்து பாடும் பாடலாகும். அவரது ஆற்றலை வியந்து பாடுவதாக அமைகிறது.

### பெயரிடுதல்

இவர்கள் எகிப்திலிருந்து புலம்பெயர்ந்து செல்லுகின்ற பயணிகள் என்பதால் செல்லுகின்ற பாதையில் ஏற்படும் அனுபவங்களின் அடிப்படையில் அந்தந்த இடங்களுக்குப் பெயரிடுகினறனர். இந்நூலில் மாரா, மன்னா, மாசா, மெரிபா, யாவே நிசி போன்ற பெயர்களைக் காணலாம்.

### மாரா

மாரா என்றால் கசப்பு என்பது பொருளாகும். செங்கடலில் நடந்து கரையேறி சூர் என்ற வனாந்தரத்தில் தண்ணீர் கிடைக்காமல் மூன்று நாள் பயணம் செய்தார்கள். அதன் பின்பு அவர்கள் கண்ட தண்ணீரும் கசப்பாக இருந்தது. அதனால் அந்த இடத்திற்கு மாரா என்று பெயரிட்டனர் *(15:23)*

### மன்னா

இது ஒரு உணவுப் பொருளின் பெயர். பல நாட்கள் பயணம் செய்து சீன் வனாந்தரத்தை வந்தடைந்தனர் இஸ்ரவேல் மக்கள். பயண களைப்பு ஒருபுறம் சாப்பிட ஆகாரம் இல்லாதது மறுபுறம் அவர்களை எகிப்தை நினைக்கத் தூண்டியது. இங்கே சுதந்தரம் இருந்தது. ஆனால் நினைத்ததைச் சாப்பிட இயலவில்லை. எகிப்தில் சுதந்தரம் இல்லை. ஆனால் சாப்பாடு இருந்தது. தங்களை வழி நடத்தி வந்த மோசேயிடமும் ஆரோனிடமும் இறைச்சியும் அப்பமும் வேண்டும் என்று கேட்டதோடு "பசியால் மாண்டு போகவோ இப்பாலை நிலத்திற்குள் நீங்கள் எங்களைக் கூட்டிக் கொண்டு வந்திருக்கிறீர்கள்" *(வி.ப.16:3)* என்று முறுமுறுத்தனர். பாவம் மோசேயும் ஆரோனும் என்ன செய்ய முடியும். இறைவன் அவர்களுக்கு உணவு தருவதாக வாக்களிக்கின்றார்.

"சாயங்காலத்தில் அவர்கள் தங்கியிருந்த இடத்தைச் சுற்றிலும் காடைகள் வந்து விழுந்தன. விடியற்காலத்தில் ஏதோ ஒரு பொருள் உறைந்த பனிக்கட்டியில் பொடியத்தனையாய்த் தரையிலே கிடக்கக்கண்டார்கள். அதற்குமன்னா என்று பெயரிட்டார்கள் *(16:13,14,31)* சாப்பிடுவதற்கான ஆகாரம். இதனுடைய தோற்றம் "கொத்தமல்லி அளவாயும். வெண்மை நிறமாயும் இருந்தது. அதின் ருசி தேனிட்ட பணிகாரத்திற்கு ஒப்பாயிருந்தது" *(16:31)* என்று இந்நூலில் குறிக்கப்படுகிறது.

### மாசா, மெரிபா

இஸ்ரவேலர் "ரெவிதீம் என்ற பகுதியில் தங்கியிருந்த போது மக்களுக்குக் குடிக்க தண்ணீர் இல்லாதிருந்தது. உடனே, தங்களுக்குத் தலைமை தாங்கி அழைத்து வந்த மோசேயோடு வாதாடினார்கள். மோசேக்கு விரோதமாகப் பேசினார்கள். இறைவன் இஸ்ரவேலரின் சத்தத்தைக் கேட்டு ஒரேப் மலையை அடிக்கும் படி மோசேயிடம் கூறினார். மோசே அப்படியே செய்ய அந்த கன்மலையிலிருந்து தண்ணீர் வந்து தாகத்தைத் தீர்த்தது. "இஸ்ரவேல் மக்கள் வாதாடினதினிமித்தமும், கர்த்தர் நம்மோடு இருக்கிறாரா இல்லையா என்று சோதித்ததாலும் அவ்விடம் மாசா என்றும் மெரிபா என்று பேரிட்டு அழைக்கப்பட்டது. *(177)* "மாசா என்பதற்கு சோதித்தல் என்றும் மெரிபா என்பதற்கு வாதாடுதல் என்றும் பொருள்"[5]

### யாவேநிசி

இஸ்ரவேல் புத்திரர் இதுவரை யுத்தத்தைக் கண்டதில்லை. அடிமைகளாக இருந்தபடியினால் அதற்கான வாய்ப்பும் இல்லை.

இரபிதிமில் இருக்கும்போது அமலேக்கியர் இஸ்ரவேலரோடு போரிட வந்தனர். மோசே யோசுவா என்பவனை போருக்குத் தலைமை தாங்கி நடத்தச் சொன்னார். இஸ்ரவேலரின் முதல் யுத்தம் அதில் வெற்றியைக் கண்டனர். வெற்றி தந்த இறைவனுக்கு மோசே ஒரு பலிபீடத்தைக் கட்டுகிறார். அதற்கு "யாவேநிசி" என்ற பெயரிட்டார். இதற்கு "ஆண்டவர் என் கொடி"[6] என்று பொருள்.

இவ்வாறாக, பயணத்தின் போது நிகழ்ந்த நிகழ்வுகளின் அடிப்படையில் சம்பவ இடங்களுக்குப் பெயரிடுகின்ற பாங்கை இங்கே காணமுடிகின்றது.

## தலைமைக்கு எதிரான போராட்டம்

எப்போதும் ஒருபயணம் அல்லது சுற்றுலாவை ஆயத்தப்படுத்தும் போது அதனை ஆயத்தப்படுத்துகிறவர் சில பிரச்சனைகளைச் சந்திக்க வேண்டிய சூழல் ஏற்படும். அப்படியே இங்கேயும் மோசே இஸ்ரவேல் மக்களை வழி நடத்தி வந்தபடியால் தங்களுக்குச் சோர்வும் துன்பமும் வந்தபோது இஸ்ரவேல் மக்கள் மோசேயிடம் எதிர்த்து நின்றனர். தண்ணீர் இல்லாத போது (15.17ஆம் அதிகாரம்), ஆகாரம் இல்லாதபோது (16ம் அதிகாரம்) மோசேக்கு விரோதமாக "எங்களைச் சாகவா அழைத்து வந்தீர்" என முறுமுறுப்பதைக் காணலாம்.

நாற்பது நாள் மோசே சீனாய் மலையில் தங்கியிருந்த போது இஸ்ரவேலர் தங்களுக்கென்று ஒரு பொன் கன்றுக்குட்டியை உருவாக்கி அதை தங்களை நடத்தி வந்த தெய்வம் என்று சொல்லி அதற்கு வழிபாடு செய்தார்கள். உண்மையில் அவர்களை நடத்தி வந்த தெய்வத்தை விட்டு விட்டு சிலை வணக்கத்தை மேற்கொண்டார்கள். இதனால் பலரும் அழிந்துபோனார்கள் (32:1-6,28). சிலை வணக்கம் இறைவனுக்கு விருப்பமில்லாத ஒன்று. தங்களை நடத்தி வந்த இறைவனை விட்டு விலகுகின்ற அளவுக்கு நன்றியுணர்வு இல்லாதவர்களாக மக்கள் இருந்தனர்.

## நாட்குறிப்பு

பயண இலக்கியங்களில் காணப்படும் மற்றொரு கூறு எந்த நாள் எந்த இடத்திற்குச் சென்றோம். எதைப் பார்த்தோம் என்று கூறுவதாகும். இந்த முறையை விடுதலைப் பயண நூலிலும் காண முடிகிறது. எகிப்திலிருந்து புறப்படுகிற மாதத்தை வருடத்தின் முதல் மாதமாகக் கணக்கிட்டுக் கொள்கிறார்கள். அந்த முதல் மாதத்தின் பத்தாம் நாள் பயணத்திற்கு ஆயத்தமாக பஸ்கா புசிக்கக் கட்டளைப் பெறுகிறார்கள். உங்கள் அரைகளில் கச்சை கட்டிக் கொண்டும், உங்கள் கால்களில் பாதரட்சை தொடுத்துக் கொண்டும், உங்கள் கையில் தடி பிடித்துக் கொண்டும் அதைத் தீவிரமாய்ப் புசிக்கக் கடவீர்கள் (12:11) என்றும் ஆட்டுக் குட்டியின் இறைச்சியோடு புளிப்பில்லா அப்பமும், கசப்பான கீரையும் புசிக்க வேண்டும் என்றும் (12:5-8) கட்டளைப் பெற்று முதல் மாதம் பதினாலாம் தேதியிலே அதை நிறைவேற்றுகிறார்கள். இந்த முதல் மாதம் ஆபிப் என்றழைக்கப்படுகிறது

(13:4). ராமசேசிலிருந்து சுக்கோத்துக்குப் போனார்கள் (12:37). ஆண்கள் மட்டுமே ஆறுலட்சம் பேராயிருந்தார்கள் (12:37) சுக்கோத்திலிருந்து பிரயாணம் பண்ணி ஏத்தாமிலே தங்கினார்கள் (13:20) அடுத்து மிக்தோலுக்கும், சமுத்திரத்துக்கும் நடுவே பாகால்செபோனுக்கு முன்பாக இருக்கிற ஈரோத் பள்ளத்தாக்கில் தங்கினார்கள். செங்கடலைக் கடந்து சூர் வனாந்திரம், ஏலீம் வந்தார்கள். இங்கே பன்னிரண்டு நீருற்றுகளும் எழுபது பேரீச்சமரங்களும் இருந்தது என்ற குறிப்பு இடம்பெறுகிறது (15:27). இரண்டாம் மாதம் பதினைந்தாம் தேதியில் சீன் வனாந்தரத்திற்கு வந்தார்கள். ரெவிதீமில் தங்கினார்கள் (17:1). மூன்றாம் மாதம் முதல் நாளில் சீனாய் வனாந்தரம் வந்தார்கள்.

மூன்று மாத பயண நாட்குறிப்பும் அதன்பிறகு சீனாய் வனாந்தரத்தில் இறைவனிடமிருந்து பெற்றுக் கொண்ட வாழ்வியல் நெறிமுறைகளும், இறைவனுக்குக் கூடாரம் கட்டுவதுமான நிகழ்வுகளும் விவரிக்கப்பட்டுள்ளன.

## வாழ்வியல் நெறிமுறைகள்

ஒரு இனக்குழு மக்கள் தங்கள் வாழ்வில் மேற்கொள்ள வேண்டிய வாழ்வியல் நெறிமுறைகள் இங்கு விவரமாகத் தரப்பட்டுள்ளன. இதனை, இறைவனுக்கும் மனிதனுக்குமிடையேயுள்ள உறவுநிலை, மனிதருக்கும் மனிதருக்குமான உறவு நிலை என இரண்டாகப் பகுக்கலாம். மட்டுமல்லாது நீதிச் சட்டங்களும் இடம் பெறுகின்றன. இந்த அறிவுரை விடுதலைப் பயணம் 20 ஆம் அதிகாரத்திலிருந்து 23ஆம் அதிகாரம் வரைக்கும் பதிவு செய்யப்பட்டுள்ளது.

"என்னைத்தவிர வேறு தெய்வங்கள் இருத்தல் கூடாது." விண்ணிலும் மண்ணிலும், நீரிலும் உள்ள யாதொன்றின் சிலையையோ, ஓவியத்தையோ உருவாக்க வேண்டாம். அவற்றை வழிபடவோ, அவற்றிற்குப் பணிவிடை புரியவோ வேண்டாம். என்னைப் புறக்கணித்தால் மூன்றாம் நான்காம் தலைமுறை மட்டும் தண்டிப்பேன், என்மீது அன்பு கூர்ந்தால் ஆயிரம் தலைமுறைக்குப் பேரன்பு காட்டுவேன். உன் கடவுளின் பெயரை வீணாகப் பயன்படுத்தாதே, ஓய்வுநாளைத் தூயதாகக் கடைப்பிடிப்பதில் கருத்தாயிரு" (வி.ப. 20:1-11) என்று இறைவனுக்கும் மனிதனுக்குமிடையேயுள்ள உறவுநிலை பதிவிடப்பட்டுள்ளது. இறைவனுக்கு இணையாக வெள்ளி அல்லது பொன்னால் தெய்வங்களை உருவாக்கக்கூடாது.

"தந்தையையும், தாயையும் மதித்து நட, கொலை செய்யாதே, விபசாரம் செய்யாதே, களவு செய்யாதே, பொய்ச் சான்று சொல்லாதே, பிறருடையது எதையும் கவர்ந்திட விரும்பாதே (வி.ப. 20:12-17) என மனிதர்களுக்கிடையே இருக்கவேண்டிய உறவு நிலைகளை இந்நூல் சுட்டிக்காட்டுகிறது.

அடிமைகள் குறித்த நீதி, வன்முறைகளுக்கு நீதி, மாட்டின் உரிமையாளரின் கடமைகள், ஈடு தருதல் பற்றிய சட்டங்கள், ஒழுக்கநெறிகள், நீதியும் இரக்கமும், ஓய்வு நாளும், ஓய்வு ஆண்டும், முப்பெரும் விழாக்கள் போன்ற ஒழுக்க நெறிகள் கற்றுக் கொடுக்கப்படுகின்றன. இதுவரைக்கும் அடிமைத்தனத்தில் இருந்து எகிப்திய வாழ்வு நெறிகளைக் கற்றுக் கொண்ட இஸ்ரவேலருக்கு ஒரு புதிய சமுதாயம் அமைய தேவையான வழிகாட்டுதல் இங்கே இருப்பதைக் பார்க்க முடிகிறது.

## கூடாரம் (வி. ப. 25-27, 36-40)

எகிப்திலிருந்து மோசே இஸ்ரவேல் மக்களை அழைத்து வந்தாலும் மோசேக்கோ, கூட வந்த மக்களுக்கோ வனாந்திர பாதை தெரியவில்லை. எங்கே செல்ல வேண்டும், எங்கே தங்க வேண்டும். எங்கே தண்ணீர் இருக்கும் எதுவும் தெரியாதாகையால் அவர்களை வழி நடத்தும் பொறுப்பை இறைவனே ஏற்றுக் கொள்கிறார். எகிப்திலிருந்து அவர்கள் புறப்பட்ட நாள் முதல் ஒவ்வொருநாளும் பகலில் மேகத் தூணாகவும், இரவில் அக்கினித் தூணாகவும் இறைவன் அவர்களோடிருந்தார். (13:21, 22) மக்கள் தவறு செய்யும் பொழுது கோபம் கொண்டாலும் மோசேயின் பரிந்துரையில் மக்களை மன்னித்து அவர்களோடு வழி நடத்தி சென்றார்.

நாற்பது நாள் தன்னோடே சீனாய் மலையில் தங்கியிருந்த மோசேயிடம் இறைவன் தான் தங்கும் இடம் எப்படியிருக்க வேண்டும் அது எந்த பொருட்களால் செய்யப்பட வேண்டும்., சுற்றுப்புறத்தின் தன்மை போன்றவற்றை எடுத்துரைத்தார். அதனடிப்படையில் மக்களிடம் காணிக்கைப்பெற்றுக்கொள்ள அறிவுறுத்தப்படுகிறார். பொன், வெள்ளி வெண்கலம், நீலம், கருஞ்சிவப்பு நிற நூல், மெல்லிய நார்ப்பட்டு, வெள்ளாட்டு உரோமம், செந்நிறமாகப் பதனிட்ட ஆட்டுக்கிடாய் தோல்கள், வெள்ளாட்டுத்தோல், சீத்தீம்மரம்,

விளக்குக்கான எண்ணெய், நறுமண வகைகள், பன்னிற மணிவகைக் கற்கள், பதித்து வைக்கும் கற்கள் போன்றவை மக்களிடம் காணிக்கையாகப் பெறப்படுகின்றது.

கூடாரத்தில் வைப்பதற்கு உடன்படிக்கைப் பெட்டி, கேரூபீன்கள், கிருபாசனம், அப்பமேசை, விளக்குத் தண்டு, பலிபீடம் போன்றவை செய்ய வேண்டிய முறைமைக் கற்றுக் கொடுக்கப்படுகிறது. கூடாரத்தின் முற்றம் எப்படியிருக்க வேண்டும் தூபபீடம், வெண்கல நீர்த்தொட்டி, நறுமணத்தூபம் இவையெல்லாம் செய்யப்பட வேண்டிய விதம் குறித்து விடுதலைப் பயணநூலில் கூறப்பட்டுள்ளது.

இறைவனால் மோசே பெற்ற கட்டளைகளை மக்களுக்குக் கூறி மக்களிடம் காணிக்கைப் பெற்று கூடாரத்திற்கான வேலைகள் நடைபெறுகின்றன. இந்த வேலையை "பெட்சலேல்" "ஒகொலியாபு" என்னும் இருவரின் தலைமையில் கலைஞர் யாவரும் செய்தனர். விடுதலைப் பயணத்தின் கடைசி அதிகாரமான நாற்பதாம் அதிகாரத்தில் கூடாரம் எழுப்பப்பட்டு அதை அர்ப்பணம் செய்கின்றனர். கூடாரப் பணிகள் யாவும் முடிந்த பின் கூடாரத்தின் மேல் இறைவனின் மாட்சி நிரம்பியது. கூடாரத்தின் மீது இறங்கியிருந்த மேகம் அவர்களை வழிநடத்தியது என்ற செய்தியோடு விடுதலைப் பயணம் முடிவுபெறுகின்றது.

### குருத்துவப்பணி (வி.ப. 28-29, 39:1-31):

இறைவன் தனக்குக் குருத்துவப்பணி செய்ய இஸ்ரவேலரில் ஆரோனையும் அவன் குமாரரையும் தேர்ந்தெடுக்கின்றார். அவர்கள் குருத்துவப்பணி செய்யும் போது அணிய வேண்டிய ஆடைகளை வடிமைப்பது குறித்தும் அவர்களைக் குருத்துவப் பணிக்கு அர்ப்பணிப்பது, தூய்மைப்படுத்துவது குறித்தும் இந்நூல் கூறுகிறது. குருத்துவப்பணியாளருக்குச் "செய்யப்படவேண்டிய உடைகளாவன: மார்புப்பட்டை, ஏப்போது, அங்கி, கோடிட்ட உள்ளாடை, தலைப்பாகை, இடைக்கச்சை ஆகியவை (வி.ப. 28.4) என்று பதிவிடப்பட்டுள்ளது. இவற்றை அணிய வேண்டிய முறை குறித்தும் தெளிவாகப் பேசுகிறது. குருத்துவப் பணிக்கு அவர்களைத் தூய்மைப்படுத்துவதற்காக காளைகளையும் ஆட்டுக்குட்டிகளையும் பலியிடுகின்ற முறைமையும் காட்டப்படுகின்றது. பலிகளை எப்படி செலுத்துவது என்பது போன்ற செய்திகளும் இடம்பெறுகின்றன.

### முடிவுகள்

யாத்திரை என்ற சொல்லின் அடியாகப் பிறந்த யாத்திராகமம், இஸ்ரவேலர் அடிமைத்தனத்திலிருந்து விடுதலைப் பெற்ற தன் விடுதலைப் பயணத்தைத் தொடங்குகின்ற விடுதலைப் பயண நூலாக நின்று, எகிப்திலிருந்து புலம் பெயர்ந்து கானான் நோக்கிச் செல்லும் பயணம் சீனாய் வனாந்தரத்தில் இறைவனுக்குக் கூடாரம் அமைத்து தங்குவதோடு முடிவடைகிறது. தொடர்ந்து அவர்கள் பயணம் பிற புத்தகங்களில் தொடர்கின்றது.

பயண இலக்கியம் என்பது ஒரு இடத்திற்குச் சென்று திரும்பி வருவதும் அதன்பின் தான் அனுபவித்த அனுபவங்களை நூலாக்கம் செய்வதாகவும் அமையும். புலம் பெயர் இலக்கியம் ஒரு இடத்திலிருந்து பிறிதோர் இடத்திற்குச் சென்று தாம் வாழுகின்ற அந்த இடத்தின் நிலைக்களன்களோடு உருவாக்கப்படுகின்ற படைப்புகளாக இருக்கும். இந்நோக்கில் பார்க்கும் போது இஸ்ரவேலர் புலம் பெயர்ந்தார்கள் என்ற செய்தியோடு அப்புலப்பெயர்வின் பயணத்தில் தாம் அனுபவித்த நிகழ்வுகளை, சந்தித்த அனுபவங்களை மோசே விடுதலைப்பயணம் என்ற நூலில் தந்திருக்கிறார் என்ற உண்மையைக் கண்டறியலாம். அதனால், இந்நூலைப் புலம் பெயாப் பயண இலக்கியமாகக் கொள்ளலாம் என்றே கருதத் தோன்றுகின்றது.

## துணை நூற்பட்டியல்


1. ஆனந்தி ஜெபசிங் (தொ.ஆ) யாத்திராகமம் பகுதி 1 கைரூஸ் மல்டிமீடியா பிரைவேட் லிமிடெட், தூத்துக்குடி, முற்பதிப்பு - 2015
2. ஆனந்தி ஜெபசிங் யாத்திரகாகமம் பகுதி -2 கைரூஸ் மல்டிமீடியா பிரைவேட் லிமிடெட், தூத்துக்குடி, முற்பதிப்பு - 2016
3. சேதுராமன் . சி. தமிழ் இலக்கிய வரலாறு (தமிழ்ச் செம்மொழி வரலாறும் இணைந்தது) நியு செஞ்சரி புக் ஹவுஸ் (பி) லிட் சென்னை, ஆறாவது பதிப்பு - 2021
4. -------------- திரு. விவிலியம் (பொது மொழி பெயர்ப்பு) இந்தியா வேதாகமச் சங்கம், பெங்களூர்


## அடிக்குறிப்புகள்

1. ஆய்த எழுத்து, காலாண்டிதழ், ஜீலை 2014, ப.15
2. சேதுராமன். சி. தமிழ் இலக்கிய வரலாறு, ப.523
3. தேவகாந்தன், புலம் பெயாந்தோர் இலக்கியம், ப.11
4. நாகராஜன், அயல் நாடுகளில் தமிழர், ப.18
5. விவிலியம் (பொது மொழிபெயர்ப்பு) ப. 111
6. விவிலியம் (பொது மொழிபெயர்ப்பு) ப. 111